# ஜனவரி – 22 – செவ்வாய்

## அல்லேலூயா! நெஞ்சார ஆண்டவருக்கு நன்றி செலுத்துவேன்: திபா. 111:1

**முதல் வாசகம் : எபிரேயர் 6 : 10 – 20**

சகோதரர் சகோதரிகளே, கடவுள் நீதியற்றவர் அல்ல. இறை மக்களுக்கு நீங்கள் முன்பு தொண்டாற்றி வந்தீர்கள் இப்போதும் தொண்டு செய்துவருகின்றீர்கள். எனவே கடவுள் பெயரால் நீங்கள் காட்டிய அன்பையும் உழைப்பையும் அவர் மறக்கமாட்டார். நீங்கள் எதிர்நோக்குவது முழு உறுதிபெறும் பொருட்டு, உங்களுள் ஒவ்வொருவரும் முன்புகாட்டிய அதே ஆர்வத்தையே இறுதி வரை காட்ட வேண்டும் என மிகவும் விரும்புகிறோம். இவ்வாறு நீங்கள், தளர்ச்சிக்கு இடம் கொடாமல், நம்பிக்கையாலும் பொறுமையாலும் இறைவாக்குறுதிகளை உரிமைப்பேறாகப் பெற்றவர்களைப் போல் வாழுங்கள். ஆபிரகாமுக்குக் கடவுள் வாக்குறுதி அளித்தபோது, தம்மைவிடப் பெரியவர் எவர் பெயராலும் ஆணையிட்டுக்கூற இயலாததால் தம் மீதே ஆணையிட்டு, "நான் உன்மீது உண்மையாகவே ஆசிபொழிந்து, உன்னைப் பல்கிப் பெருகச் செய்வேன்" என்றார். இதன்படி அவரும் பொறுமையோடு காத்திருந்து, பின் கடவுள் வாக்களித்ததைப் பெற்றுக்கொண்டார். தங்களைவிடப் பெரியவர் ஒருவர் பெயரால்தான் மக்கள் ஆணையிடுவர். எல்லாச் சச்சரவுகளிலும் ஆணையிட்டே முடிவு கட்டுவர். அம்முடிவை ஆணை உறுதிப்படுத்தும். அவ்வாறே, கடவுளும் தம் வாக்குறுதியை உரிமைப்பேறாகப் பெற்றோருக்குத் தம் திட்டத்தின் மாறாத் தன்மையை மிகவும் தெளிவாகக் காட்ட விரும்பி, ஓர் ஆணையால் தம் வாக்கை உறுதிபடுத்தினார். மாறாத் தன்மையுடைய இவை இரண்டையும் பொறுத்தவரையில் கடவுள் உரைத்தது பொய்யாயிருக்க முடியாது. அடைக்கலம் தேடும் நாம், நம் கண்முன் எதிர்நோக்கியுள்ளதை விடாமல் பற்றிக்கொள்வதற்குத் தளரா ஊக்கம் கொண்டிருக்கவேண்டும். இந்த எதிர்நோக்கே நம் உள்ளத்திற்குப் பாதுகாப்பான, உறுதியான, நங்கூரம் போன்றுள்ளது. இது கோவிலின் திரைச்சீலைக்கு அப்பால் சென்று சேர்ந்திருக்கிறது. நமக்கு முன்னோடியாய் அந்தத் திரைச்சீலையைக் கடந்து இயேசு அங்குச் சென்று சேர்ந்திருக்கிறார். மெல்கிசதேக்கு முறைப்படி என்றென்றும் தலைமைக் குரு என்னும் நிலையில் நம் சார்பாக அவர் அங்குச் சென்றிருக்கிறார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தம் உடன்படிக்கையை என்றும் நினைவில் கொள்கிறார்.

**நற்செய்தி : மாற்கு 2 : 23 - 28**

ஓய்வு நாளில் இயேசு வயல் வழியே செல்ல நேர்ந்தது. அவருடைய சீடர் கதிர்களைக் கொய்துகொண்டே வழி நடந்தனர். அப்பொழுது பரிசேயர் இயேசுவிடம், "பாரும், ஓய்வு நாளில் செய்யக்கூடாததை ஏன் இவர்கள் செய்கிறார்கள்?" என்று கேட்டனர். அதற்கு அவர் அவர்களிடம், "தாமும் தம்முடன் இருந்தவர்களும் உணவின்றிப் பசியாய் இருந்தபோது தாவீது என்ன செய்தார் என்பதை நீங்கள் வாசித்ததே இல்லையா? அபியத்தார் தலைமைக் குருவாய் இருந்தபோது தாவீது இறைஇல்லத்திற்குள் சென்று, குருக்களைத் தவிர வேறு எவரும் உண்ணக்கூடாத அர்ப்பண அப்பங்களைத் தாம் உண்டதுமன்றித் தம்மோடு இருந்தவர்களுக்கும் கொடுத்தார் அல்லவா?" என்றார். மேலும் அவர் அவர்களை நோக்கி, "ஓய்வுநாள் மனிதருக்காக உண்டாக்கப்பட்டது மனிதர் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப் படவில்லை. ஆதலால் ஓய்வு நாளும் மானிட மகனுக்குக் கட்டுப்பட்டதே" என்றார்.

**தியானம்:** இயேசுவும் அவருடைய சீடர்களும் வயல் வழியே செல்லுகின்ற போது இயேசுவின் சீடர்கள் கதிர்களைக் கொய்து கொண்டே நடக்கின்றார்கள். சாதாரண நாட்களில் செல்லும்போது கதிர்களைக் கையால் கொய்து கொள்வது குற்றம் கிடையாது. ஆனால் அவர்கள் கதிர்களை ஓய்வு நாளில் பறித்ததினால் தான் பரிசேயர்கள் அவர்களைக் குற்றப்படுத்தினார்கள். சீடர்களுக்கும் இது நன்றாகத் தெரியும். இருந்தும் அவர்கள் அதைப் பறிக்கின்றார்கள். ஏனென்றால் அதற்குக் காரணம் தாங்கமுடியாத பசி. இங்கே சீடர்கள் செய்த தவறு ஓய்வுநாளில் கதிர்களைப் பறித்தது. ஓய்வுநாளை முழுமையாகக் கடைப்பிடிக்க ஆயிரத்திற்கும் மேற்பட்ட விளக்கங்களை யூத மதத்தலைவர்கள் வகுத்திருந்தனர். அது அந்த ஒழுங்கு முறைகளுக்கு எதிராக அமைந்திருந்தது சீடர்களின் செயல்பாடாகும். சட்டம் மனிதம் இரண்டில் இயேசு மனிதத்திற்கு முன்னுரிமை கொடுப்பதை நாம் இங்கு பார்க்கின்றோம். ஓய்வுநாளில் எந்த வேலை செய்யலாம் எந்த வேலை செய்யத்தகாதது என சட்டங்கள் மக்கள்மீது பெரிய சுமை சுமத்தப்படலாயிற்று. இதையே இயேசு கண்டித்தார். ஓய்வுநாளின் உண்மைப் பொருளை மறந்தது தவறு என்று சுட்டிக்காட்டிய இயேசு ஓய்வுநாள் மனிதரின் நன்மைக்காகவே உருவாக்கப்பட்டது என்னும் கருத்தை ஆழமாக எடுத்துரைத்தார். ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்கக்கூடாது என்பது எண்ணம் அல்ல, ஆனால் மனிதம் எப்போதும் முன்னிறுத்தப்பட வேண்டும் என்பது தான் இயேசுவின் விருப்பம். இதை நாமும் கடைப்பிடித்து வாழ்வோம் ஆமென்.